**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 06.06.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உலக சுற்றுச்சூழல் தினம்

உலக சுற்றுச்சூழல் தினம் - 2023 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பாக சுற்றுச்சூழல் அறிவியல் துறையில் ஜீன் 5 ஆம் தேதி கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டில் நெகிழி மாசு பாடுகுறைப்பு மற்றும் விழிப்புணர்வு பற்றிய பல்வேறு அங்கங்களாக, மலபார் கோல்டு & டைமண்டு மற்றும் ஐ.டி.சி ஆகிய குழுமங்களுடன் இணைந்து பல்வேறு நிகழ்வுகள் மற்றும் போட்டிகள் நடத்தப்பட்டன. அவற்றுள் ஒரு நிகழ்வாக வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவ மாணவியர்களின் மனித சங்கிலி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர், முனைவர் இரா.தமிழ்வேந்தன், சுற்றுச்சூழல் அறிவியல் துறைத்தலைவர் முனைவர் மு.மகேஸ்வரி மற்றும் பயிர் மேலாண்மை இயக்ககத்தின் இயக்குனர் முனைவர் மு.க.கலாராணி அவர்களால் கொடி அசைத்து துவக்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வேளாண் பல்கலைக்கழகத்தின் நிர்வாக இயக்குநர்கள், முதன்மையர்கள் மற்றும் சுமார் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன்பாக நெகிழி மாசுபாடு மற்றும் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி முழக்கங்களை எழுப்பினர். அதைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு பழ மரக்கன்றுகளை வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. இந்த நிகழ்வையடுத்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள பொன்விழா அரங்கில் நெகிழி மாசுபாடு குறித்த கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்கம் மற்றும் பட்டிமன்றம் ஆகியவை நடைபெற்றன. காற்று, மண், நீர் மற்றும் உயிரினங்கள் ஆகியவற்றிற்கு நெகிழியினால் ஏற்படும் தீங்குகளை மாணவர்கள் தங்களின் சிந்தனை துகள்களை கருத்தரங்கத்தின் வாயிலாக விளக்கினர்.

அதன் பிறகு சுற்றுச்சூழல் அறிவியல் துறை, முதுகலை மாணவர்களின் ‘‘நெகிழி பயன்பாடு மனித குலத்தை விண்ணை தொட வைக்குமா? அல்லது மண்ணில் புதைய வைக்குமா? என்ற தலைப்பில் நெகிழி பயன்பாடு, மாசுபாடு, விழிப்புணர்வு மற்றும் நெகிழியின் பல்வேறு தன்மைகள், ஊடுருவும் முறை ஆகியவற்றை பற்றி காரசாரமான பட்டிமன்றம் நடைபெற்றது. இந்த பட்டிமன்றத்தின் நிறைவாக மாணவர் நல மையத்தின் முதன்மையர் முனைவர் நா.மரகதம், அவர்களால் நெகிழி மாசுபாடு பற்றியும் அவற்றை தவிர்க்க வேண்டிய வழிமுறைகள் மற்றும் இன்றியமையாமை குறித்தும் விளக்கினார். அவற்றைத் தொடர்ந்து உலக சுற்றுச்சூழல் தின நிகழ்வாக கருத்தரங்கில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர், முனைவர் இரா.தமிழ்வேந்தன் அவர்கள், முனைவர் எஸ்.டி. சிவக்குமார் (PI - IDP), முனைவர் மு.மகேஸ்வரி மற்றும் முனைவர் பெ.தேவகி ஆகியோர் முன்னிலையில் நெகிழி மாசுபாடு குறித்த சிறந்த புகைப்படபோட்டி, கவிதைப் போட்டி, குறும்பட தொகுப்பு, நெகிழி கைவினை பொருட்கள் மற்றும் பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலையின் பதிவாளர் அவர்கள் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை மாணவர்களுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்வுகளின் தொடர்ச்சியாக இணையவழி கருத்துரை ‘‘நெகிழிகள் உலகின் அடுத்த நெருக்கடி’’ என்ற தலைப்பில் முதன்மையர் முனைவர் முகமது ரியாஸ்உட் (UNDP Accelerator lab, Figi) அவர்களால் வெகுசிறப்பாக எடுத்துரைக்கப்பட்டது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**